பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 08 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தில் பங்கேற்குமாறு போலந்த் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை மீட்க, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. திண்டிவனத்தில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் டாபர் நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. மக்கள் தொகை கணக்கெடுப்பை, சாதிவாரி கணக்கெடுப்பாக மத்திய அரசு நடத்த வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

5. சுவிட்சர்லாந்த் சர்வதேச மகளிர் செஸ் போட்டியில், இந்தியாவின் **Padmini Rout** தங்கப்பதக்கம் வென்றார்.

*-- இனி விரிவான செய்திகள் --*

**<<<<<<>>>>>>**

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தில் பங்கேற்குமாறு போலந்த் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக போலந்த் சென்றுள்ள அவர், அந்நாட்டு பிரதமருடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் அவருடன் இணைந்து கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை பரஸ்பரம் வலுப்படுத்துவதென இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

உக்ரைன் மற்றும் மேற்காசிய பகுதிகளில் நடைபெற்றுவரும் மோதல்கள் கவலை அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

எந்தவொரு பிரச்சினைக்கும் மோதல் ஒரு தீர்வாக அமையாது என்றும் பிரதமர் கூறினார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்தியில் மூன்றாவது முறையாக பிஜேபி அரசு பொறுப்பேற்ற 100 நாட்களுக்குள் 11 லட்சம் மகளிர் லட்சாதிபதிகளாக உருவெடுக்க உள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான சான்றிதழ்களை பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 25-ஆம் தேதி வழங்க உள்ளதாக தெரிவித்தார்.

அன்றைய தினம் மகாராஷ்ட்ரா மாநிலம் **Jalgayn**-யில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதியையும் பிரதமர் விடுவிக்க உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை மீட்க, மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - முருகன் (1) – 33 செகண்ட்ஸ்)*

முன்னதாக, கல்வி நிறுவன நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய திரு எல். முருகன், மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில்கொண்டுதான் தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - முருகன் (2) – 32 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

திண்டிவனத்தில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் டாபர் நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

சிப்காட் உணவு பூங்காவில் அமையவுள்ள இந்த உற்பத்தி ஆலைக்கான ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது

இதன்மூலம் 250 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

தமிழகம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரியின் நீர்வளத்துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகழாய்வில் சூதுபவள கல் மணியில் குழிவான முறையில் செதுக்கப்பட்ட திமில் உள்ள காளை கண்டறியப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும் என்று மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், கடந்த இரண்டு கட்ட அகழாய்வில் 15 சூது பவள கல் மணிகள் கிடைக்கப்பெற்றதாகவும்

கூறியுள்ளார்.

இருப்பினும், சீறும் திமில் உள்ள காளை கிடைக்கப்பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு சார்பில் மேற்கொள்ளப்பட உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பை, சாதிவாரி கணக்கெடுப்பாக நடத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமூக நீதியை காப்பதற்கு சாதிவாரி கணக்கெடுப்பு அவசியமாகிறது என்றார்.

மத்திய அரசின் சார்பில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டாலும், தமிழகத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாக்க மாநில அரசு சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் திரு ராமதாசு அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திண்டுக்கல் மாவட்டம் எல்லப்பட்டி ஊராட்சியில் மாநில அரசின் வீட்டுவசதித்திட்டத்தின்கீழ், 179 வீடுகளை கட்டுவதற்கான பணிகளை உணவு அமைச்சர் திரு சக்ரபாணி இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண் பணிகளுக்கு தேவையான உரம் கையிருப்பில் உள்ளதாக ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

------------------

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் நகராட்சியில் மேல்நிலை குடிநீர் தொட்டி பராமரிப்பு குறித்து ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

ராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் வட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை ஆட்சியர் திரு சிம்ரன்ஜீத் சிங் காலோன் இன்று ஆய்வு செய்தார்.

---------

தருமபுரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 13 கோடி ரூபாய் அளவிற்கு கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி சாந்தி கூறியுள்ளார்.

-------------

பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் காலை உணவுத்திட்டம் குறித்து ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று ஆய்வு செய்தார்.

---------------

செங்கல்பட்டில் இன்று நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

--------------

பழனியில் வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறவுள்ள அனைத்துலக முருகன் மாநாட்டிற்கான வரவேற்பு காணொலி வெளியிடப்பட்டது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் செஸ் போட்டியில், இந்தியாவின் **Padmini Rout** தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில், ஒன்பது புள்ளிகளை பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

ஆசிய ஜுனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Tanvi Reddy** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் **Chengdu**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-13 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Janyaporn Meepanthong** –ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Tankara Gnana Dattu Talasila** மற்றும் **Abhinav Garg** காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் **Tanvi Patri** -யும், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Raghul Kadabakula – Vedant Pahwa** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

------------------

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Rashmi Ganesh – Sania Sikkander** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------------

**Winston Salem** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dhakshineswar Suresh** – இங்கிலாந்தின் **Luca Pow** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------------

ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஹரிஷ் முத்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மாலத்தீவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் காலிறுதிக்கு முன்னேறியதன் மூலம் 2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப்போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றுள்ளார்.

<<<<<<END>>>>>>